**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**M.C.O.P.189/2023**

**CNR.No.TNCB19000**

Date: 29.01.2026 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராஜப்பன் | **வயது** | |
| **த/பெ** | **மாதைய கவுடர்** | **வட்டம்** | கோயமுத்தூர் |
| **விலாசம்** | திம்மம்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 29th January 2026

ம.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் திம்மம்பாளையம் மருதூரில் பிறந்ததில் இருந்தே வசித்து வருகிறேன். எனக்கு இந்தியன் வங்கி காரமடை கிளையில் கணக்கு உள்ளது. அந்த வங்கி பாஸ் புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை. பான் கார்டை தாக்கல் செய்யவில்லை விபத்து நடந்த இடம் 3 சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது மகனின் தொலைபேசி மூலமாக எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். விபத்துக்கு பின்னிட்டு சட்டப்பணிகள் ஆணைக்குழு வில் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

நான் மனு தாக்கல் செய்யும்போதே ஆவணங்கள் எடுக்க முடியும் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டதும் காப்பீட்டு நிறுவனத்திற்கு தகவல் கொடுக்கவில்லை. விபத்திற்கு பின்னிட்டு ஒன் கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா. ஆ 7 காயச்சான்றிதழில் பெடஸ்டியன் - எதிர்- Two wheeler என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளரை மட்டுமே தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றும் அந்த வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல

என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் ம.சா.ஆ 12 ல் வரிசை எண். 2, 3, 4, 5, 6, மற்றும் 13, 14, 15 ஆகியவை பில் 16 என்பதிலேயே சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அதனால் அந்த தொகையான ரூ. 22, 739/- கழிக்கத்தக்கது என்றால் சரிதான். வாகனத்தின் ஓட்டுனர் எனது உறவினர் என்பதனால் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மொத்த பில்களின் ரூ. 2,84,363/- தொகை மட்டுமே மருத்துவ சிகிச்சைக்காக பெறக்கூடியது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நான் நடந்து சென்று கொண்டிருந்ததாகவும் அந்த சமயத்தில் இரு சக்கர வாகனம் மோதியதாக மருத்துவ குறிப்புகளில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் வாகனம் வருவதை பார்க்காமல் திடீரென குறுக்கே வந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் விபத்துக்கு என்னுடைய அஜாக்கிரதையும் ஒரு காரணம் என்றும் எனது வயது, வருமானம் மற்றும் தொழில் குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் இந்த விபத்தினால் எனக்கு எந்தவிதமான நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்பதாலும் நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகப் படியானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL
Digitally signed by K PALANIVEL
Date: 2026.01.29 20:11:37 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.